புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
ISSN : 2456-821X
Peer-Reviewed
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/03 - March 2023

# சூழலியல் நோக்கில் சங்க இலக்கிய மீட்டுருவாக்க நாடகங்கள்

**ஆய்வாளர்**
**செ.ரோஸ்லின் மேரி**,
*முனைவர்பட்ட ஆய்வாளர் (பகுதிநேரம்)*
*தமிழாய்வுத்துறை,*
*தூய வளனார் தன்னாட்சிக்கல்லூரி, திருச்சிராப்பள்ளி-2*
*(திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது).*

**நெறியாளர்**
**முனைவர் ஞா.பெஸ்கி**,
*இணைப்பேராசிரியர்*
*தமிழாய்வுத்துறை,*
*தூய வளனார் தன்னாட்சிக்கல்லூரி,*
*திருச்சிராப்பள்ளி-2*
*(திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது).*

**ஆய்வுச்சுருக்கம்**

*சூழலியல் என்பது இன்று வெகுவாக வளர்ந்துவருகின்ற ஒரு துறையாகும். தமிழிலே அறிவியல் தமிழ், கணினித்தமிழ் போன்ற வகைகள் வளர்ந்துவருகின்ற நிலையில் சூழலியல் தொடர்பான சிந்தனையும் மேலோங்கியுள்ளது என்றே கூறலாம். இத்துறையானது சூழலுக்கும் உயிரினங்களுக்கும் இடையிலான உறவை ஆராயும் ஒரு துறையாக வளர்ச்சி கண்டுள்ளது. சங்கஇலக்கியங்கள் பொதுவாகவே முதல், கரு, உரிப்பொருட்களை அடிப்படையாகக்கொண்டு பாடப்பட்டுள்ளன. இதனை மையப்படுத்திப் படைக்கப்பட்டுள்ள மீட்டுருவாக்க நாடகங்களைக் கொண்டு பழந்தமிழரிடத்தே காணப்பட்ட சூழலியல் தொடர்பான சிந்தனையை ஆராய்ந்தறிவதே இக்கட்டுரையின் மையநோக்கமாகும். சங்க இலக்கியத்தை மறுவாசிப்புக்கு உட்படுத்தி மீட்டுருவாக்கநிலையில் படைக்கப்பட்டுள்ள மீட்டுருவாக்க நாடகங்களின்வழி சங்ககாலச் சூழலியல் சிந்தனைகளைத் தேடித்தொகுப்பதோடு சூழல்மாசுபாட்டிற்கான தீர்வினையும் இக்கட்டுரை முன்வைக்கிறது. ஆ.பழனியின் அனிச்சஅடி (1973), நலங்கிள்ளியின் கரிகால்வளவன் (1998) மலையமானின் நீர்மாங்கனி(1997) இருதலைப்பறவை (1998), இன்குலாப்பின் குறிஞ்சிப்பாட்டு (2003), பண்ணனின் தலையாலங்கானத்தலைவன்(2007) ஆகிய சங்க இலக்கிய மீட்டுருவாக்க நாடகங்களே இங்குச் சூழலியல் நோக்கில் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.*

***திறவுசொற்கள்***

*சூழலியல், சூழல்மண்டலம், மறுவாசிப்பு, மீட்டுருவாக்கம், சங்க இலக்கியப் பிரதிகள், நீர்மேலாண்மை, பல்லுயிர் பெருக்கம், மார்க்சிய சூழலியல்*

***முன்னுரை***

*பழந்தமிழ் நூல்கள் பல அறங்களை வலியுறுத்தினாலும், சூழல் சார்ந்து அது முன்வைக்கும் அறம் 'இயற்கையோடு இயைந்த வாழ்வே இனிய வாழ்வு' என்பதாகும். உலகில் வாழ்ந்த, வாழ்கின்ற அறிஞர்களும், சான்றோர்களும் இயற்கை வளங்கள் எந்த நாளும் காக்கப்பட வேண்டியவை என்பதை உணர்த்தியே வந்திருக்கின்றனர். இயற்கையோடு இயைந்த வாழ்வை நடத்தியவனாகத் தமிழன் வாழ்ந்தான் என்பதற்குச் சங்கஇலக்கியங்கள் சான்று பகர்கின்றன. சுற்றுச்சூழலியல் என்பது உலகமுக்கியத்துவம் வாய்ந்த ஒப்பற்ற அறிவியல் சிந்தனையாகும். மனிதன் இயற்கையைத் தவறாகவும் அலட்சியமாகவும் கையாண்டதன் விளைவாக உலகம் முழுவதும் சுற்றுச்சூழல் சிக்கல்கள் பெருவடிவம் எடுத்துள்ளன. இச்சிக்கல்கள் மனித வாழ்வையும் பிற உயிரினங்களின் வாழ்க்கைச்சூழலையும் பெரும்பாதிப்பிற்கு உள்ளாக்கிவருகின்றன. எதிர்காலத்திற்கு மிகப்பெரும் சவாலாக விளங்கும் சூழலியல் சிக்கல்களைத் தவிர்த்துச் சூழல்பாதுகாப்பை மேம்படுத்தவேண்டியதன் தேவையைச் சங்க இலக்கிய மீட்டுருவாக்க நாடகங்கள்வழி ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.*

***சூழலியல் - விளக்கம்***

*சூழலைப்பற்றியும் சூழலுக்கும் உயிரினங்களுக்கும் உள்ள தொடர்பு பற்றியும் அறிவியல் அடிப்படையில் விரிவாக ஆராயும் அணுகுமுறையாகச் சுற்றுச்சூழலியல் இருக்கிறது. கிரேக்க மொழியைத் தழுவிய சூழலியல் என்ற சொல்லானது 'ஒய்கோஸ்' மற்றும் 'லோகஸ்' ஆகிய இரண்டு சொற்களால் ஆனது என்றும் ஒய்கோஸ்' என்னும் சொல் 'வீடு' அல்லது 'வாழிடத்தையும்', 'லோகஸ்' என்னும் சொல் 'அறிவியலையும்' குறிக்கிறது என்றும் அறியப்படுகிறது. இவ்விரண்டு சொற்களும் இணைந்து 'இக்காலஜி' என்ற சொல்லாக திரிபு பெற்றுள்ளது. இது பொதுவாக உயிரினங்களை அவை வாழும் சூழ்நிலையிலேயே படிப்பது என்பதாகப் பொருள் அறியப்படுகிறது.*

*சூழலியல் என்கிற கருத்துருவை முதன்முதலில் பயன்படுத்திய 'எர்னஸ்ட் ஹெக்கல்', சூழலியலை "சூழலுடன் உயிரினங்களுக்குள்ள தொடர்பு பற்றிய அறிவியல்" என்று வரையறுத்துள்ளார். இதனையே அருண்நெடுஞ்செழியன்,"சூழல்மண்டலங்களின் உயிருள்ள மற்றும் உயிரற்ற பொருட்களுக்கிடையேயான உறவைக்குறித்துப் பேசுகிற அறிவியல்தான் 'சூழலியல். சூழலியலானது இயற்கையின் கட்டமைப்பு இயக்கம் அதற்கிடையேயான உறவைக் குறித்து அறிவியல் நோக்கில் பகுப்பாய்கிறது"(அருண்நெடுஞ்செழியன், 2013, ப.19) என்று குறிப்பிட்டுள்ளார்*

*சுராஸ் சுப்ரீம் ஆங்கிலம்-ஆங்கிலம்-தமிழ் அகராதியானது 'Ecology' என்கிற சொல்லுக்கு "சுற்றுச்சூழலுக்கும் விலங்குகள், தாவரங்கள் மற்றும் மனிதர்களுக்கும் இடையிலான உறவினை ஆய்வதுதான் சூழலியல்" (ப.364) என்று பொருள் தருகிறது.*

*பிரிட்டானிகா தகவல் களஞ்சியம் ''உயிரினங்களுக்கும் அவற்றின் சூழலுக்கும் இடையிலுள்ள தொடர்புகளைப் பற்றிய ஆராய்ச்சி''(சுதா சேஷய்யன், 2007, ப.189) என்று சூழலியலை விளக்குகிறது.*

*இவற்றின் வழி சூழலியல் என்பது சூழலுக்கும் உயிரினங்களுக்கும் இடையிலான தொடர்பு பற்றி ஆராய்வதோடு பிறஅறிவியல் துறைகளையும் இணைத்துக்கொண்டு இயற்கையை முழுமையாகப் புரிந்துகொள்ள முனைகிற அறிவியல் துறை என்பது தெளிவாகிறது.*

***சூழல் பாதுகாப்பின் இன்றியமையாமை***

*மக்கள்தொகைப் பெருக்கத்தாலும், தொழில்நுட்ப வளர்ச்சியினாலும் சுற்றுச்சூழல் அதிகமாகப் பாதிப்பிற்கு உள்ளாவதை உலகநாடுகள் உணர்ந்துள்ளன. இதனால் சுற்றுச்சூழல் சீரழிவிற்குக் காரணமான செயல்களைக் கட்டுப்படுத்தி நடவடிக்கைகள் எடுக்கத் தொடங்கியுள்ள உலகநாடுகள் 1960களில் இருந்தே சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றன. பல்வேறு நாடுகள் கல்வி நிறுவனங்கள் சுற்றுச்சூழல் சட்டங்கள், நெறிமுறைகள் ஆகியவற்றின் வழி சூழல்பாதுகாப்பிற்கு வழிவகுக்கின்றன. உலகநாடுகள் பல தங்களுக்கிடையே ஒப்பந்தங்கள் செய்தும் சூழலைப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்து வருகின்றன.*

*சர்வதேச சுற்றுச்சூழல் உடன்படிக்கைகள் சில நேரங்களில் சட்டரீதியான ஆவணங்களாகவும், கொள்கைகளாகவும் பயன்படுத்தப்படுகின்றன. பல நாடுகளின் அரசியலமைப்புகள் சூழல் பாதுகாப்பை ஒரு அடிப்படை உரிமையாகவே அங்கீகரித்துள்ளன. இவை தவிர பன்னாட்டு அளவில் மாநாடுகள் பல நடத்தப்பட்டு சூழல் பாதுகாப்பிற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.*

*ஆல்டோ லியோபோல்ட் எழுதிய 'எ சேண்ட் கவுண்டி அல்மனாக்', கா ஹார்டு எழுதிய 'பொது மனிதனின் துயரங்கள', ரேச்சல் கார்சனின் 'சைலண்ட் ஸ்பிரிங்'போன்ற உலக இலக்கியங்களும் அண்டார்டிகா பிளாக்கேட், தி லோக்ஸ் போன்ற நூல்களும் சூழல் பாதுகாப்பை வலியுறுத்தி எழுந்த இலக்கியப் படைப்புகளாகும். அவ்வகையில் தமிழிலக்கிப்பரப்பில் எழுந்துள்ள சங்க இலக்கிய மீட்டுருவாக்க நாடகங்களிலும் சூழல்பாதுகாப்பு பற்றிய சிந்தனைகள் முன்வைக்கப்படுகின்றன.*

*''மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழல்*
*காடும் உடையது அரண்'' (திருக்குறள் - 742)*

*என்னும் குறளுக்கு இலக்கணமாக விளங்கும் அதேவேளையில் மிக மோசமான சீரழிவைச் சந்தித்துவரும் நாடுகளுள் ஒன்றாகவும் இந்தியா விளங்குகிறது. பெருநகரங்களின் விரிவு, தொழிற்சாலைக்கழிவுகள், இயற்கைவளம் வீணடிக்கப்படுதல், மக்கள்தொகைப் பெருக்கம் ஆகியவற்றால் மட்டுமின்றி இயற்கை வளங்களுக்கும் மனிதவாழ்விற்கும் இடையே சமன்பாடு இல்லாத காரணத்தாலும் சூழ்நிலைமண்டலம் அழிந்துகொண்டே வருகிறது. இதனைச் சரிசெய்யும் பொருட்டுச் சூழல்*

பாதுகாப்பிற்கெனச் சட்டங்கள், கருத்தரங்குகள், முகாம்கள், அரசியல் சாசனத் திருத்தங்கள் போன்ற பல நடவடிக்கைகளை இந்தியஅரசு மேற்கொண்டு வருகிறது.

**பொருளாதாரமும் சூழல்மேம்பாடும்**

சங்ககாலச்சமூகத்தின் பொருளாதார நிலையை இரண்டுவகையாகக் குறிப்பிடலாம். இயற்கையில் கிடைத்தவற்றையும் வேட்டையில் கிடைத்தவற்றையும் கொண்டு உணவில் பற்றாக்குறையில் வாழ்ந்தது முதல்நிலையாகவும், தாராளமாக விளைச்சல் இருந்தபிறகும் ஒருசிலரிடமே செல்வம் குவிந்ததால் பெரும்பான்மையோர் வறுமையிலும் ஏழ்மையிலும் வாழ்க்கை நடத்தியது இரண்டாம் நிலையாகவும் அமைந்திருந்தன. இவ்விரு கூறுகளையும் உள்ளடக்கியனவாகவே சங்கஇலக்கியப்பாடல்கள் பொருளாதாரம் பேசுகின்றன.

பழமையான வேளாண் சமூகங்களான சீனா, எகிப்து, ஜப்பான் போன்ற நாடுகள் அறிவார்ந்த வகையில் பல ஆண்டுகளாக மண்ணின் வளங்களைஃ பாதுகாத்ததோடு மட்டுமின்றி மண்வளத்தை அதிகரிக்கவும் செய்துள்ளன. ஆனால் முதலாளித்துவ உற்பத்தியானது வணிகநோக்கத்தாலும், போட்டிகளாலும் அனைத்து வளங்களையும் தேவையற்ற வகையில் வீணடிக்கின்றJ. இது சமூகத்தின் வளத்திற்கு இழப்பாகவும், தனியுடைமை முதலாளிகளுக்கு ஆதாயமாகவும் அமைகின்றது. இத்தகைய நிலையில் இயற்கைச் சுரண்டலுக்கும் வல்லரசின் மேலாண்மைக்கும் எதிரான கருத்துகளை இன்குலாப் குறிஞ்சிப்பாட்டு நாடகத்தில் பதிவுசெய்துள்ளார்.செவ்விந்தியப் பகுதியை விலைக்குக் கேட்ட அமெரிக்கக் குடியரசுத்தலைவரை நோக்கி சியாட்டில் முன்வைக்கும் ,வானத்தையும் பூமியின் கதகதப்பையும் எப்படி .உங்களால் வாங்கவோ விற்கவோ முடியும்? (குறிஞ்சிப்பாட்டு, ப.68).என்னும் புரட்சிக்குரல் நீர், காற்று உள்ளிட்ட இயற்கைப் பொதுவளங்கள் அனைவருக்கும் உரியதாக மாறவேண்டும் என்பதை வலியுறுத்துகிறது.விளைச்சலால் பொருளாதாரச் சூழல் மேம்பட்டிருந்தது என்பதற்குச் சங்கஇலக்கியங்கள் சான்றுபகர்கின்றன. எடுத்துக்காட்டாக, பிசிராந்தையார் கோப்பெருஞ்சோழனைப் பற்றிப் பாடிய 'நுங்கோ யாரென வினவின்' (புறம் 212:1) எனத்தொடங்கும் புறநானூற்றுப் பாடலில் இடம்பெற்றுள்ள 'யாணர்நல்நாடு' என இடம்பெற்றுள்ள தொடர் அவனுடைய நாடு, கடல்கடந்து வணிகத்தால் புதுவருவாயைப் பெற்றதையும் மக்களின் தேவையறிந்து தன் நாட்டின் பொருளாதாரச் சூழலை அவன் வளப்படுத்தியிருந்ததையும் சுட்டுகிறது. இதனையே மலையமான் இருதலைப்பறவை நாடகத்தில் ,

''நின்கோ யார்எனக் கேட்கிறீர், கூறுவேன்'' (இருதலைப் பறவை, ப.88)

என்று பதிவு செய்துள்ளார். களத்தில் தொழிலைச் செய்வோருக்காக வளமாய் அரித்தெடுத்த மதுவை அவர்கள் ஆமை இறைச்சியுடன் சேர்த்து உண்ணச் செய்த நிகழ்வை

''------ஆங்கே பாணரின்
வருந்தும் சுற்றத்தின் பசிக்குப் பகையாய்

இருப்பான் கோப்பெருஞ்சோழமன்னன்." (இருதலைப்பறவை - ப.88)

எனப் பிசிராந்தையார் கூற்றாக வெளிப்படுத்துகின்றார்.

அதே வேளையில் மழைப்பொழிவு இன்மையால் வறட்சி ஏற்பட்டு மக்கள் பட்டினிக்குத் தள்ளப்பட்ட நிலையில் நன்னன் வரிசெலுத்த வலியுறுத்தும்நிலையில் அதனை எதிர்த்துக் காராளர் வெளிப்படுத்தும் ,

"விசும்பின் துளிகள் தரைமணக்க மறந்ததால்
பசும்புல்லும் கூட தலைகாட்டவில்லையே!
இன்று,
வெம்மையின் நாக்கு வயல்தலை பயிர்முடி
தின்றொழித்து விடவே தரைமொட்டை ஆனது
காய்ந்த வயல்களால் காய்ந்தன வயிறுகள்
தீயின் ஆட்சியால் ஓய்ந்தன அடுப்புகள்
கொடிய இந்நிலையில் வரியைச் செலுத்திட
முடியுமா?" (நீர் மாங்கனி - ப.82)

என்னும் எதிர்க்குரல் இயற்கைச் சீரழிவையும் அரசுஅதிகாரத்தின் வல்லாண்மையையும் சுட்டுகின்றது.

சுற்றிலும் வரகும், எள்ளும் முளைக்கச்செய்து, மூங்கில் அரிசிகளை விளையச்செய்து வைரம் பாய்ந்த தேக்குமரங்களையும், சந்தனமரங்களையும் அரணாக அமைத்து எண்ணற்ற சுனைகளையும் கொண்டு விளங்கியது பாரியின் பறம்புமலை. இத்தகைய பறம்புமலையின் மிகுதியான வளத்திற்காகவே மூவேந்தர்களால் அது முற்றுகையிடப்பட்டதைக் கவிஞர் இன்குலாப் குறிஞ்சிப்பாட்டில் சிறப்பாகப் பதிவு செய்துள்ளார்.

***நீர் மேலாண்மை***

பழந்தமிழர் அக்காலத்தில் நீரைச்சேமித்து வைத்துப் பயன்படுத்தும் வகையில் கரைகளுடன் கூடிய குளம் முதலான பல்வேறு நீர்நிலைகளை அமைத்து நீர்பாதுகாப்பு செய்து சுற்றுச்சூழல் மேம்பாட்டுச்சிந்தனையுடன் செயல்பட்டதைச் சங்கஇலக்கியங்கள் பதிவுசெய்துள்ளன. புதுப்பெயலான மழைநீரை ஆங்காங்கே சேமித்துவைக்கவேண்டும் என்ற முறைமை எழுதப்படாத சட்டமாகவே அக்காலத்தில் இருந்துள்ளது. மதகு, மடு, ஏரி, குளம், ஊருணி போன்ற நீர்நிலைகளும், இறைப்புநீர் பாசனம், ஏரி பாசனம், ஏற்றம் இறைத்தல், ஆற்றுநீர் பாசனம் போன்ற பாசனமுறைகளும் பழந்தமிழர் நீரைச் சேமித்து பாதுகாத்த கடமையுணர்வை வெளிப்படுத்துகின்றன.

ஆறு, கிணறு, குளங்களுக்குக் கரையமைத்து நீரைப் பாதுகாக்கவேண்டும். அவ்வாறு கரையமைக்காவிடின் அந்நீர் பயன்படாமலே போய்விடும் என்பதை,

"காடுகொன்று நாடாக்கி
குளம்தொட்டு வளம்பெருக்கி" (பட்டினப்பாலை – 283-284)

என்னும் அடிகள் உணர்த்துகின்றன. குளம்வெட்டி நீரைத்தேக்கிப் பயிர்த்தொழிலுக்கு ஏற்றவழிகளை அமைத்துத் தருவது மன்னனின் கடமையாகவே இருந்தது என்பதைத் தெளிவுறுத்துகின்றன.

*"குடலுள் குருதி இருத்தல் போன்று*
*அடிமலை குடைந்து நீர்இருத்தப்பெற்றால்*
*ஆவியாய் அந்நீர் குறைதல் குறையும்*
*மேவிப்படரும் வான்தாமரைக்கொடி*
*வளர்க்கப்பட்டால் நிரிழிவு அருகும் " (நீர்மாங்கனி, ப.86)*

*என்று இயற்கைப் பிழைகளைத் தாண்டிப் பிழைப்பதற்கு வழிகளைச் சுட்டுவதால் நீர்வள மேலாண்மையின் முக்கியத்துவம் உணரப்படுகிறது.*

*நாட்டின் பொருளாதாரம் அதன் நீர் வளத்தாலேயே சிறப்படைகிறது. நீர்வளம் இயற்கையாக இல்லையெனினும் அதனை செயற்கைமுறையில் பெருக்கிக்கொள்ளும் வழிகளைப் புறநானூற்றின் வெளிச்சத்தில் நீர்மாங்கனி எடுத்துக்கூறுகின்றது.*

*அடுபோர்ச் செழிய! இகழாது வல்லே*

*நிலனொளி மருங்கின் நீர்நிலை பெருகத்*
*தட்டோ ரம்ம இவண்தட் டோரே*
*தள்ளா ரோரிவண் தள்ளாதோரே! (தலையாலங்கானத்தலைவன் ப.16)*

*என்னும் பாண்டியன் நெடுஞ்செழியனுக்குக் குடபுலவியனார் கூறிய புறநானூற்றுப்பாடல்வழியிலான அறிவுரையை தலையாலங்கானத்தலைவன் நாடகப்பகுதியில் பண்ணன் கையாண்டுள்ளார். எதிரிகளை சிறைபிடிப்பதைக் காட்டிலும் நீரைச் சிறைபடுத்தும் வழிமுறைகளை மேற்கொள்வதே உயர்ந்தது என அறிவுறுத்துவது நீரின் இன்றியமையாமையைப் புலப்படுத்துகிறது.*

*"அதற்குமுன் ஆக்கப்பணிகளில் அரசன்*

*கருத்துளன் காவிரிக் கரையமைத்தி திடவும்*
*அணை,மத கமைக்கவும், அதனாற் செந்நெல்*
*வேலி யாயிரம் விளையுட் டாகவும்*
*உறந்தை, நாகை, ஒண்புகார்க் காஞ்சி*
*வலிவொடு பொலிவும், மண்புகழ் சிறப்பும்*
*அமைந்திடப் புதுக்கிட, அருநெறி படைத்திட*
*வழிவகுத் துள்ளனன் மன்னன்" (கரிகால் வளவன் ப.181)*

*என்ற கரிகால் வளவன் நாடக வரிகள் கல்லணை குறித்து இயம்புகின்றன. பெருக்கெடுத்து ஓடிவருகின்ற வெள்ளம் கல்லணையில் தங்குமாறுபோல கல்லை இடித்துச் செய்த சுருங்கிய நீர்வரும் வாயுடைய முழுமுதலரணம் என்று இதற்கு விளக்கம் தரப்படுகின்றது.*

*"இந்தியாவின் புகழ்மிக்க கங்கைக் கால்வாய் திட்டத்தை உருவாக்கிய 'போயர்டு ஸ்மித்' என்னும் ஆங்கிலப் பொறியியலாளர், கல்லணையைப் பார்வையிட்ட அந்த நொடியிலேயே 'மானுடத்தின் மிகப்பெரிய பொறியியல் சாதனை இது' என்று தன்னை மறந்து குறிப்பிட்டுள்ளார்." (வெ.இறையன்பு, இலக்கியத்தில் மேலாண்மை ப.27) இதன்மூலம் பழந்தமிழரின் நீர்வள மேலாண்மையயும் தொலைநோக்குப் பார்வையையும் அறிந்துகொள்ள முடிகிறது. இவ்வாறு சங்க இலக்கிய மீட்டுருவாக்க நாடகங்களில் இடம்பெறும் இச்செய்திகள் பழந்தமிழர் நீரின் இன்றியமையாமையை உணர்ந்து அதை மேம்படுத்தவும் வளம் குறையாமல் காக்கவும் தேவையான முனைப்புகளில் ஈடுபட்டிருந்தனர் என்பதைப் புலப்படுத்துகின்றன.*

***மலைபாதுகாப்பு***

*உலகின் சிலபெரும் பணமுதலைகளின் ஆதாயத்திற்காக உலகின் சுற்றுச்சூழல் விலையாகக் கொடுக்கப்பட்டு எதிர்கால மனிதவாழ்வு கேள்விக்குள்ளாக்கப்படும் செயலானது முன் எப்போதையும்விட இப்போது அதிகமாக நடைபெற்று வருகின்றது. இந்த நிலையில் மீளச் சரிசெய்யமுடியாத நிலையை உலகம் விரைவினில் அடைந்துவிடும் என அறிஞர்கள் கணிப்பிடுகின்றனர். இத்தகு நிலைமை இந்தியாவிலும் குறிப்பாகத் தமிழகத்திலும் தலைகாட்டத் தொடங்கியுள்ளது. தமிழகம் முழுவதும் பரவலாக மேற்கொள்ளப்பட்டு வரும் மண் அகழ்வுகள், காடழிப்பு, விளைநிலங்கள் விளைச்சலிலிருந்து விலகுதல் என இப்பட்டியல் நீண்டு செல்கிறது. இதனை இன்றைய மீட்டுருவாக்க நாடகங்களும் எடுத்துக்காட்டுகின்றன.*

*"ஈண்டு நின்றோர்க்கும் தோன்றும்...*
*நெடியோன் குன்று" (புறநானூறு – 114)*

*என்று புறநானூறு பாரியின் பறம்புமலையைக் குறிப்பிடுகிறது. அதாவது தூரத்தில் நகர்ந்து சென்று இங்கிருந்து பார்ப்போருக்குத் தெரியும் 'நெடியோன் குன்று' என்பது இப்பாடலின் பொருளாகும். இம்மலைக்குத் தெற்கே 'கூத்துப்பாரி பொட்டல்' என்றொரு இடமும் உண்டு. பாரி முல்லைக்கொடிக்குத் தேர் கொடுத்த கதையினை நினைவுபடுத்தும் வகையில் இன்றும் இப்பகுதி மக்களிடையே 'கொடி தளும்பினால் குடி தளும்பும்" என்னும் வழக்காறு காணப்படுகின்றது. அவ்வாறே 'பாரி வேட்டை' என்ற பெயரில் இப்பகுதியில் ஒருவகையான கூத்தும் நெடுங்காலமாகவே இடம்பெற்றுவருகிறது. இதனை இப்போது பிரான்மலை எனவும் அழைக்கின்றனர். பறம்புமலையின் அழிவை இன்றைய சூழல் அழிப்பின் அடிப்படையில் இன்குலாப்பின் குறிஞ்சிப்பாட்டு,*

*"அருவிகள் எங்கே?*

*குளிர்ந்த சுனை எங்கே?*
*புதிதாய் பூக்கும் குவளைகள் எங்கே?*
*ஆறுகள் புதைந்தன*
*அருவிகள் தொலைந்தன*
*குளிர்ந்த சுனைகள் குப்பைக்குழிகளாக*
*குவளைப் பூக்கள் முகமழிந்து போயின*
*காடுகள் எல்லாம் காணாமல் போயின*
*பாடும் வண்டுகள் பண்ணை மறந்தன*
*பறம்பு தேய்ந்து பிரான்மலை ஆனது" (குறிஞ்சிப்பாட்டு, ப.16)*

*என்று பதிவுசெய்துள்ளது. இங்கு முல்லை என்பது இயற்கையின் ஒரு குறியீடாகவும் தேர் என்பது அரசஅதிகாரத்தின் குறியீடாகவும் கொள்ளப்படுகிறது. இயற்கையினைப் பேணுவதற்காகத் தனது 'கறங்கு மணி நெடுந்தேர்' என்ற பெரிய அரச அதிகாரத்தினைக் கைவிட்டவன் என்று புலவர் பெருமக்களால் பாரி பாராட்டப்பட்டுள்ளான். இத்தகைய சிறப்பிற்குரிய பறம்புமலை மட்டுமல்லாது இதுபோன்ற பல இயற்கைவளங்கள் அழிக்கப்படுவது எதிர்காலவாழ்விற்கு மிகப்பெரும் சவாலாக இருக்கும் என்பதே உண்மை.*

***வன பாதுகாப்பு***

பழந்தமிழர்களின் வீரம் ஒருபுறம் பெருமைக்குரியதாகப் பேசப்படுகின்ற அதே சூழலில் போர்களால் சுற்றுச்சூழல் மாசு ஏற்பட்டதையும் ஒருபுறம் இலக்கியங்கள் சுட்டிக்காட்டுகின்றன. போரின்போது விளைநிலங்களும், காவல்மரங்களும், நீர்நிலைகளும் அழிக்கப்பட்டன. விளைநிலங்கள் உணவுஉற்பத்திக்குப் பயன்படாவண்ணம் நிலம் மாசடையுமாறு பாழ்படுத்தப்பட்டன. பகைமன்னர்களின் வயல்வெளிகளை எள்ளும் கொள்ளும் விதைத்துக் கழுதை ஏர்பூட்டி உழுததைப் புறப்பொருள் வெண்பாமாலை குறிப்பிடுகின்றது. பகையின் காரணமாக மாற்றாரின் காவல்மரங்களை அழிப்பது வெற்றிக்கு அடையாளமாகக் கொள்ளப்பட்டது. இச்செயலால் மிகுதியான மரங்கள் அழிக்கப்பட்டதையும் இலக்கியங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

“நன்னன்
நறுமா கொன்று ஞாட்பில் போக்கிய
ஒன்றுமொழிக் கோசர்” (குறுந்தொகை – 73)

என்னும் சங்க இலக்கியப் பதிவை,

“நினைத்தது போல நெடுமரம் வீழ்ந்தது
கிளைகள் நிலத்திடை வீழப்புரிந்தன
தழையும் பிஞ்சும் ததைந்து கூழாயின
ஒடியுங் கிளைமர ஒலிதரூஉ மின்னிசை
இடியுந் தேனும் இசையப் பிசைந்து
பண்ணிய தாகிய பண்ணியம் போல” (அனிச்ச அடி ப.74)

என்னும் அனிச்சஅடி நாடகப்பகுதி உறுதிசெய்கிறது.

எதிரியின் நாடு வெற்றி கொள்ளப்பட்ட பின்பு அந்நாட்டினர் மீண்டும் படையெடுக்கா வண்ணம் அந்நாட்டிற்குப் பொருளாதார அடிப்படையிலான மிகுந்த பாதிப்பை ஏற்படுத்துதல் போர் தந்திரமாகக் கருதப்பட்டது. இத்தகைய சூழலியல் அழிப்பு இன்றைய காலகட்டத்தில் பின்பற்றப்படுவதைக் காணமுடிகிறது. வளிமண்டலத்தில் நுழைந்து காற்றினை மாசுபடுத்தும் காரணிகளைத் தவிர்க்க மரங்களை அழிக்காமல் பாதுகாக்கவேண்டியதன் அவசியத்தை மீட்டுருவாக்க நாடகங்கள் எடுத்துரைக்கின்றன.

**உயிரின பாதுகாப்பு**

பாரம்பரிய வளம் பற்றி மனிதன் பேசிக்கொண்டிருக்கும் அதேவேளையில் காட்டுயிரிகளின் அழிவுகுறித்தும் சிந்திப்பது இன்றியமையாததாக இருக்கிறது. காடுகளை அழித்தலும், தண்ணீர்ப்பற்றாக்குறையும், நகரமயமாக்கலும், நவீன தொழில்நுட்பங்களின் பெருக்கமும், உயிர்க்கொல்லி உரங்களின் தாக்கமும் பறவைகளுக்கு எமனாக மாறிவருகின்றன. கடும் வெப்பம், காட்டுத்தீ, காட்டுவெள்ளம், கடும் வறட்சி, வாழ்விடச்சிதைவு, விலங்குகளால் துன்புறுத்தப்படுதல், பறவைகள் வேட்டையாடப்படுதல் போன்ற காரணங்களால் பறவையினங்கள் அழிவிற்குள்ளாயின. இத்தகு சூழலில் பறவையினங்களைச் சகஉயிரினமாக மதித்து அவற்றைப் பாதுகாத்து வந்தவன் ஆஅய்எயினன் குறித்துக் கு.வெ.பாலசுப்பிரமணியன் கயற்கண்ணி நாடகத்தில் பதிவுசெய்துள்ளார்.

*"உயிர்க்குலம் இங்கே உலவிடும் பாங்கே*
*செயிர்தீர் அன்பைச் செப்பிடும்" (கயற்கண்ணி,ப.86)*
*"மன்றிற் களித்திடும் புட்களெல்லாம் வைர*
*மாலையில் கட்டிய கற்களம்மா" (கயற்கண்ணி, ப.85)*

என்னும் அடிகள் சூழ்ச்சி, வஞ்சம். கொலை, களவு போன்றவற்றை அறியாத பறவைகள் பளிங்குபோல் காட்சியளிக்கும் தூய்மையின் தூதர்கள். அவை உச்சியிலிருந்து நோக்கினால் உலவும் மனிதரெல்லாம் ஊறும் எறும்பாகின்றனர். அன்பின் வழி நடந்தால் கேடில்லை என்று பறவைகளின் வாழ்வியல் அடிப்படையில் மானுடவிழுமியத்தை உணர்த்துகின்றன. பறவையினங்கள் போன்று மனிதர்கள் ஒற்றுமையுணர்வுடன் வாழவேண்டுமென இந்நாடகங்கள் வலியுறுத்துகின்றன.

### மாசுபாடு தவிர்ப்பு

தூய்மையான வாழ்வியலைப் பின்பற்றி வாழ்ந்த சங்கஇலக்கிய மாந்தருள், தூய்மையற்ற சூழலியலையும் காணமுடிகின்றது. சுத்தமான உணவும், நீரும் கிடைக்காதபோது தூய்மையற்ற உணவையும், நீரையும் பயன்படுத்துகின்றனர். மேலும் புகை, தூசு போன்றவற்றால் சுவாசக்கேடு உள்ளிட்ட நோய்களும் ஏற்படுகின்றன.

*" தித் : வானவேடிக்கை நடத்துவர் புகையை*
*விதைத்து வான்வரை வளர்த்து மகிழ்வர்*
*இதனால் வெம்மை தன்கண் விழிக்கும்*
*வானக் குடையை அழிக்கும்*
*ஊமைப்படுத்தும் மாசுகள் தரைநடும்*
*மணி : மேலெறி நெருப்பால் நெற்போர் குடிசை*
*கூலக்குதிர்கள் அழிதலும் உண்டு*
*தித் : மண்ணின் சினம்போல் இவை எல்லாம் எரிவதால்*
*புண்படும் வானம் மழையைச் சுருக்கும்*
*இவற்றைக் குறைத்தால் கார்மனம் குளிரும்*
*தவற்றை நிறுத்தல், ஏற்கும் முதற்கடன்" (நீர் மாங்கனி ப.82)*

என்னும் பகுதி மாசுபாட்டின் பல்வேறு நிலைகளை அடையாளம் காட்டுகிறது. மனிதனின் அறிவீனத்தால் மட்டுமின்றி அக்கறையின்மை, சுயநலம், பேராசை போன்றவற்றாலும் சூழல் மாசுறுத்தப்படுகின்றது. இந்தச்சூழலை மாற்றி எதிர்காலத் தலைமுறைக்குத் தூய்மையான வாழிடத்தை கொடுக்கவேண்டியது இன்றைய தலைமுறையினரின் முக்கியக் கடமையாக இருக்கவேண்டும் என்பதை நீர்மாங்கனி எடுத்துரைக்கிறது.

### நிறைவுரை

பண்டைத்தமிழர் தம்மைச் சுற்றியிருந்த சூழலை நன்கு ஆராய்ந்து அதனைத் தமது செய்யுட்களில் பதிவுசெய்து சென்றுள்ளதை மீட்டுருவாக்க நாடகங்கள் வெளிப்படுத்துகின்றன. சூழலியல்சிந்தனைகளின் வளர்ச்சியில் அதன் முன்னோடிகளாகத் தமிழர்கள் இருந்துள்ளனர் என்பதை உறுதிசெய்வனவாக மீட்டுருவாக்க நாடகங்கள் அமைந்துள்ளன. பண்டைத்தமிழர்க்கும் சூழலுக்கும் இடையே காணப்பட்ட நெருக்கமான தொடர்பை இலக்கியச்சான்றுகள் நிறுவுகின்றன.

தமிழர்களின் நிலம், நீர், வளி, ஆகியவை மாசடைதல் குறித்த தமது மனப்பதிவுகளையும், சூழல்பாதுகாப்பில் அவர்களிடத்தே இருந்த விழிப்புணர்வையும் இச்சான்றுகள் எடுத்துக்காட்டுகின்றன. இவ்வாறான சூழலியல் சிந்தனைகளை மீட்டுருவாக்க நாடகங்கள் மூலம் படைப்பாளர்கள் வெளிக்கொணர்வதோடு அவற்றுக்கான தீர்வுகளையும் முன்வைத்துள்ளனர் என்பது தெளிவாகிறது.

**துணைநின்ற நூல்கள்**


1. அருண் நெடுஞ்செழியன், மார்க்சிய சூழலியல், பூவுலகின் நண்பர்கள் வெளியீடு, சென்னை,2013
2. இறையன்பு.வெ, இலக்கியத்தில் மேலாண்மை, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2017.
3. இன்குலாப், குறிஞ்சிப்பாட்டு, மித்ரா ஆர்ட்ஸ், சென்னை, 2003.
4. சுதா சேஷய்யன் (பதி.), பிரிட்டாணிகா தகவல் களஞ்சியம், தொகுதி-2. என்சைக்ளோபீடியா பிரிட்டானிகா (இந்தியா), விகடன் பிரசுரம், சென்னை, 2007
5. பண்ணன், தலையாலங்கானத்தலைவன், நாம் தமிழர் பதிப்பகம், சென்னை, 2007.
6. பழனி.ஆ., அனிச்சஅடி, கழக வெளியீடு, சென்னை, 1973.
7. பாலசுப்பிரமணியன் கு.வெ., கயற்கண்ணி, உமா வெளியீட்டகம், தஞ்சாவூர், 1995.
8. மலையமான், இருதலைப்பறவை, அன்புப்பதிப்பகம், சென்னை, 1998.
9. மலையமான், நீர்மாங்கனி, அன்புப்பதிப்பகம், சென்னை, 1997
10. நலங்கிள்ளி, கரிகால்வளவன், வாணன் பதிப்பகம், அரக்கோணம், 1988.
11. Sura's Supreme Dictionary, English-English-Tamil (Revised and Enlarged). An Imprint of Sura books (Pvt) Ltd., Chennai, 2010.